இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 85 – ஒலி: 50 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 12 – செவ்வாய்க்கிழமை 29 செப்டம்பர் 2026 – கோவை ★★ 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 85 - Issue 50 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 12 - Tuesday 29 September 2026 - Kovai ★★ 10 Pages ₹ 5.00

தேர்ந்தெடுக்கப்பட்ட 12 நாட்களில் எம்.எல்.ஏ. பதவி ராஜினாமா: தொகுதி

வாக்காளர்களுக்குத் துரோகம் செய்தவருக்கு தக்க பாடம் புகட்டுங்கள்!

மதுராந்தகத்தில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை!

மதுராந்தகம், செப்.29-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் நடைபெறுவதையொட்டி, கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின், நேற்று முன்தினம் தனது தேர்தல் பரப்புரை செய்தார். மதுராந்தகத்தில் பெருந் திரளாகக் கூடியிருந்த மக்கள் மத்தியில் அவர் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:-

பரந்தாமன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் ஒரு மிகப்பெரிய வெற்றியை நீங்கள் தேடித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்காக, உங்களை எல்லாம் தேடி நான் இங்கே வந்திருக்கிறேன். நேற்று முன்தினம் தாராபுரம் சட்டமன்றத்தொகுதி பிரச்சாரத்துக்குச் சென்றிருந்தேன். நான் 100 சதவிகிதம் அடித்துச் சொல்கிறேன், உறுதி யாகச் சொல்கிறேன். தாராபுரத்திலும் நம்மு டைய திராவிட முன்னேற்றக் கழகம், நம்மு டைய உதயசூரியன் சின்னம் வெற்றிப்பெறப் போவது உறுதி.

நான் உங்களிடத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ளும் வேண்டுகோளெல்லாம் தாராபுரம் தொகுதியில் பெறுகின்ற வெற்றியை விட அதிகமான வாக்கு வித்தி யாசத்தில், மதுராந்தகத்தில் மிகப்பெரிய வெற்றியை பரந்தாமன் அவர்களுக்கு நீங்கள் தேடித்தர வேண்டும்.

செப்டம்பர், 27– மிகப்பெரிய வடு!

இன்றைக்கு செப்டம்பர் 27. சென்ற வரு டம் இதே செப்டம்பர் மாதம் 27-ஆம் தேதி என்ன நடந்தது என்று உங்களுக்கு நான் ஞாபகப்படுத்த தேவையில்லை. இங்குள்ள அத்தனை பேருக்கும் தெரியும். நாமெல்லாம் மறக்கக்கூடிய சம்பவம் அல்ல அது. நம் அனைவருடைய மனதிலும் நீங்காத காயத்தை ஏற்படுத்திய ஒரு மிகப்பெரிய வடு.

பிரச்சாரம் செய்யப்போகிறேன் என்று சொல்லி, இப்போது இருக்கக்கூடிய முதல மைச்சர், சென்ற வருடம் கரூருக்கு, கிட்டத் தட்ட 10 மணி நேரம் தாமதமாகச் சென்றார். அங்கே இருக்கக்கூடிய மக்களுக்குத் தண் ணீர் கூடக் கொடுக்காமல், ஒரு கழிப்பறை வசதி கூட ஏற்படுத்தாமல், தாமதமாகச் சென்றதனால் மிகப்பெரிய ஒரு மக்கள் நெரிசல் ஏற்பட்டு, 10 குழந்தைகள் உள்பட 41 உயிர்கள் பலியான நாள் சென்ற வருடம் செப்டம்பர் 27-ஆம் தேதி.

அந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்க ளுக்கு அன்றைக்கு, இன்றைய முதலமைச் சர் அவர்கள் இன்றைக்கு ஆறுதல் தெரிவிக் கிறார், வருத்தம் தெரிவிக்கிறார். அன்றைக்குத் தெரிவித்தாரா? ஒரு ஆறுதல் கூடச் சொல்லாமல், மக்களையும் சந்திக்கா மல், வாகனத்தின் மீது ஏறி நின்று கொண்டு, பாட்டுப் பாடிவிட்டு, அவர் கண் முன்னாலேயே 20 பேர் இறக்கும் போது, அங்கிருந்து ஓடிப்போய், திருச்சி விமான நிலையத்திற்குச் சென்று, அங்கே இருக்கக் கூடிய மக்களும் பத்திரிகையாளர்களும் அவ ரைக் கேள்வி கேட்க தடுத்தபோது அதற்கெல் லாம் பதில் சொல்லாமல் ஓடிவிட்டார். திருச்சி விமான நிலையத்திலே அழைக்கிறார்கள், மக்கள் அழைக்கிறார்கள், பத்திரிகையாளர் கள் கேட்கிறார்கள், "சார், 25 பேர் இறந்து விட்டார்களா?" என்று கேட்கிறார்கள். அதற்கு பதில் சொல்ல வக்கில்லை.

அதன்பிறகு சென்னை விமான நிலையத் தில், பத்திரிகையாளர்கள், பொதுமக்கள் அவரைத் தடுத்து நிறுத்தினார்கள், கேள்வி கேட்டார்கள். அதற்குப் பதில் சொன்னாரா? அதற்கும் பதில் சொல்லத் துப்பில்லை. அன் றைக்கு, தான் தாமதமாக வந்ததால்தான் 41 பேர் கரூரில் இறந்து போயிருக்கிறார்கள் என் பதை உணர்ந்தாரா? இன்றோடு ஒரு வருடம் ஆயிற்று. எந்தவிதமான ஒரு குற்ற உணர்ச்சியே இல்லாமல், மனசாட்சியே இல்லாமல் ஓடிப்போன முதலமைச்சர்தான் இன்றைக்கு இருக்கக்கூடிய ஓடுகாலி முதல மைச்சர்.

இன்றைக்கு அவர் மக்களை ஏமாற்றி முத லமைச்சர் ஆகியிருக்கலாம். ஆனால் இதை நினைத்துப் பார்த்து, அந்த மனிதர் ஒரு நாள் கூட நிம்மதியாகத் தூங்க முடியாது.

கடந்த இரண்டு வருடமாக எங்கு சென்றா லும் அவர் தொடர்ந்து சொல்வது, மக்கள் மன தில் ஆழமாகப் பதிய வைத்திருப்பது என்ன தெரியுமா? அவர் சொல்வார். `ஓம் சக்தி பரா சக்தி' என்று சொல்லி நம்மைத் திட்டுவார். அப்போது அவர் எதிர்க்கட்சியாக இருந்தார், நாம் ஆளுங்கட்சியாக இருந்தோம். அப் போது அவர் சொல்வதையெல்லாம் நாம் கேட்டுக்கொண்டு இருந்தோம்.

இப்போது நமக்கு ஒரு வாய்ப் புக் கிடைத்திருக்கிறது. இப்போது நாம் திருப்பிச் சொல்வோமா?

``ஓம் காளி, ஜெய்காளி! ஓம் காளி ஜெய்காளி! ஓடுகாலி டி.வி.கே"

``ஓம் காளி ஜெய்காளி! ஓடு காலி டி.வி.கே" என்று சொல்லுங் கள்.

இனிமேல் நாம் ஒவ்வொரு கூட்டத்திலும், ஒவ்வொரு பிரச்சா ரக் கூட்டத்திலும் மக்களைச் சந் திக்கும் போது இதைத் தொடர்ந்து சொல்ல வேண்டும். மக்கள் மன தில் பதிய வைக்க வேண்டும்.

இயற்கையாக வந்த இடைத்தேர்தலா?

சரி, நான் ஒன்று கேட்கிறேன். இன்றைக்கு இரண்டு தொகுதிகளில் இடைத்தேர்தல் நடக் கிறது. இது ஏன் நடக்கிறது என்று நீங்களெல்லாம் யோசித்துப் பார்த்தீர்களா? இது இயற்கையாக வந்த இடைத்தேர்தலா? இந்த இடைத்தேர்தல் வருவதற்கு காரணமா னவர் யார்?

"ஓம் காளி, ஜெய்காளி! ஓடுகாலி டி.வி.கே"

சென்ற ஏப்ரல் 23-ஆம் தேதி தேர்தல் நடந் தது. திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறும் என்று நாம் நினைத்தோம், வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டோம். ஆனால், ஒரு கட்சி ஆட்சி அமைப்பதற்கு குறைந்தது 118 சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றிபெற வேண்டும். ஆனால், இங்கு இருக்கக்கூடிய இந்த 'கரகாட்ட கோஷ்டி கட்சி', 118 இடங்கள் வெற்றி பெற்றார்களா?

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்



மக்களை ஏமாற்றி முதலமைச்சர் ஆனார் விஜய்!

சென்னை விமான நிலையத்தில், பத்திரிகையாளர்கள், பொது மக்கள் அவரைத் தடுத்து நிறுத்தினார்கள், கேள்வி கேட்டார்கள். அதற்குப் பதில் சொன்னாரா? அதற்கும் பதில் சொல்லத் துப்பில்லை. அன்றைக்கு, தான் தாமதமாக வந்ததால்தான் 41 பேர் கரூரில் இறந்து போயிருக்கிறார்கள் என்பதை உணர்ந்தாரா? இன்றோடு ஒரு வருடம் ஆயிற்று. எந்த விதமான ஒரு குற்ற உணர்ச்சியே இல்லாமல், மனசாட்சியே இல்லாமல் ஓடிப்போன முதலமைச்சர்தான் இன்றைக்கு இருக்கக்கூடிய ஓடுகாலி முதலமைச்சர்.





மாற்றுத் திறனாளி சிறுமி பாலியல் வன்கொடுமை:

சொரணையற்ற அரசே! நீதி வேண்டும்!

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி ட்விட்டர் பதிவு!

சென்னை, செப்.29-

மாற்றுத் திறனாளி சிறுமி பாலி யல் வன்கொடுமைக்கு உள்ளாக் கப்பட்டதற்கு வேதனை தெரிவித் துள்ள துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி அவர்கள், சொரணை யற்ற இந்த அரசு பாதுகாப்பும், நீதியும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று குறிப் பிட்டு சமூக வலைதளப்பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

தி.மு.க. துணைப் பொதுச் செய லாளர் கனிமொழி ராஜாத்தி கரு ணாநிதி அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-



மதுராந்தகம் அருகே கொங்க ரையில் மாற்றுத்திறனாளி சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள் ளாக்கப்பட்ட செய்தி மிகுந்த வேதனையளிக்கிறது.

இன்னும் எத்தனை கொடுஞ் செய்திகளை தமிழ்நாட்டு மக்கள் கேட்க வேண்டும் என்று இந்த த.வெ.க. அரசு எதிர்பார்க்கிறது?

உயிரச்சத்தில் உறைந்து போய் உள்ள மக்களின் குரல் கூட இந்த சொரணையற்ற அரசின் காதுக ளுக்கு கேட்கவில்லையா?

உடனடியாக குற்றவாளிகளை கைது செய்து, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு உரிய பாதுகாப்பும் நீதி யும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட் டுள்ளார்.

